# இது தமிழ்நாடு, மோடி மஸ்தான் வேலை இங்கு செல்லாது!

**சோ**ழர்களின் மீது திடீர் பாசம் கொண்ட மோடி தமிழ்நாட்டிற்கு வந்து வேட்டி சட்டையுடன் புது வேடம் போட்டுச் சென்றுள்ளார். ராஜராஜ சோழன் மற்றும் ராஜேந்திர சோழனுக்கு தமிழ் நாட்டில் சிலை வைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

வழக்கமாக, தி.மு.க. என்ன நன்மை செய்தாலும் அதை மறைத்து, உண்மையை திரித்து மக்களை ஏமாற்றும் கூட்டமொன்று உடனே புறப்பட்டுவிட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ராஜராஜ சோழனுக்கு முறையான புகழைச் சேர்த்திருந்தால், மோடியால் இப்படிப் பேச முடியுமா என்று தி.மு.க.வின் மீது புழுதிவாரி தூற்றத் தொடங்கி விட்டனர். அப்படி புழுதி வாரித் தூற்றும் போலிகளின் முகத்திரையை கிழிப்பதோடு, மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டியதும் நம் கடமை என்பதாலேயே இக்கட்டுரையை வரைகிறேன்.





**தமிழுக்கும், தமிழருக்கும் தி.மு.க. செய்ததைப் போல வேறு யார் செய்திருக்கிறார்கள் ?**

★ 2025 ல் சோழப்பேரரசர்களுக்கு சிலை வைப்பேன் என்று சொன்னதற்காக மோடியை வானளாவப் புகழும் அரசியல் அறிவிலிகளுக்கு 1972 ம் ஆண்டே அதாவது பா.ஜ.க. என்ற கட்சி தொடங்கப்படுவதற்கு முன்பாகவே, ஆம் நண்பர்களே பா.ஜ.க. என்ற கட்சி 1980ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால், அதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பாகவே, 1972 ம் ஆண்டே தஞ்சையில் ராஜராஜ சோழனுக்கு கம்பீரமாக சிலை எழுப்பியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.



மகராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜிக்கு 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு சிலையைத் திறந்தார் மோடி. அச்சிலை திறக்கப்பட்ட சில மாதங்களிலேயே காற்றில் உடைந்து நொருங்கியது. ஆனால், அரை நூற்றாண்டைக் கடந்தும் கம்பீரமாய் நிற்கிறது கலைஞர் எழுப்பிய சோழன் சிலை..

★ சிலை எழுப்பியதோடு மட்டும் நின்றாரா ? இல்லை, 2010 ம் ஆண்டு மிகப் பிரமாண்டமாய் ராஜராஜ சோழனின் 1000 மாவது ஆண்டு சதய விழாவை தஞ்சையில் நடத்தி சோழர்களின் பெருமையை உலகறியச் செய்தவர் கலைஞர். அந்த சதய விழாவின் போது நடந்த ஒரு முக்கியமான செய்தி இக்கால தலைமுறை பலரும் அறிந்திடாத ஒன்று. அதை நினைவுபடுத்த வேண்டியது நம் கடமை.

**தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டிய பெருந்தச்சன் சோழனுக்கு பெருமை சேர்க்க ராஜராஜனின் உருவத்தை தத்ரூபமாக செப்புச் சிலையாக வடிக்கிறான். அதோடு சோழனின் பட்டத்து அரசி, உலக மாதேவியின் சிலையையும் வடிக்கிறான். இந்த இரு செப்புச் சிலைகளும், 1940 50 காலகட்டத்தில் திருடப்படுகின்றன. திருடு போன இச்சிலைகள் இரண்டும் குஜராத்தில் உள்ள காலிகோ மியூசியத்தில் இருப்பதை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர், உடனே அப்போது குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடிக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதுகிறார். அச்சிலைகளை தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்துகிறார் கலைஞர்.**

**கடிதம் எழுதியதோடு நில்லாமல், அன்றைய கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், இறையன்பு ஐ.ஏ.எஸ்., தொல்பொருள் ஆய்வாளர்கள் நாகசாமி, நடனகாசிநாதன், குடவாயில் பாலசுப்ரமணியம் ஆகியோர் அடங்கிய குழுவை 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் குஜராத்திற்கு அனுப்புகிறார். இக்குழு அன்றைய குஜராத் முதலமைச்சர் மோடியைச் சந்தித்து, 1000 ஆண்டு பழமையான அச்சிலைகளை தமிழ் நாட்டிற்கு சொந்தமான அப்பொக்கிசங்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கே எடுத்துச் செல்ல ஆவண செய்யுமாறு மோடியிடம் வலியுறுத்துகின்றனர். தமிழ்நாட்டின் அந்தக் குரலுக்கு உளப்பூர்வமாக அன்று மோடி செவி சாய்த்திருந்தால், அப்போதே அச்சிலைகள் தமிழ்நாடு வந்திருக்கும்.**

2010 ம் ஆண்டு செப்டம்பர் 25, 26 ஆகிய இரு நாட்கள் கலைஞர் நடத்திய பிரமாண்டமான சதய விழாவை ராஜராஜ சோழனும், பட்டத்து ராணி உலகமாதேவியும் சிலையாய் நின்று ரசித்திருப்பார்கள். ஆனால், அப்பணியை உளப்பூர்வமாக அப்போது செய்யாமல் போன குஜராத்தின் முன்னாள் முதலமைச்சர் மோடிதான் இப்போது இந்தியாவின் பிரதமராக சோழர்களின் மீது திடீர் பாசத்தைப் பொழிகிறார். அவரின் மோடி மஸ்தான் வேலைகளுக்கு மயங்க இது வடநாடல்ல. தமிழ்நாடு என்பது அவருக்குப் புரியவில்லை.



**“ தமிழ் கேள்வி”**
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்

**இப்படி தமிழர் கலாசாரத்தைத் தொடர்ந்து உலகிற்கு பறைசாற்ற எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்த தி.மு.க.வைப் பார்த்து அரசியல் அரிச்சுவடி கூட அறியாத சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் போடும் நாடகத்திற்கு திரைக்கதை ,. வசனம் எழுதி அவர்களை இயக்குவது பாஜகவும் ஆர்.எஸ்.எஸ்.சும் என்பதை தமிழ் நாட்டு மக்கள் நன்கறிவர்.**

கலைஞர் காலத்தில் சோழனின் புகழ் பாடியதைப் பற்றி இன்னுமா பேசிக் கொண்டிருப்பீர்கள் . இப்போது உள்ள திராவிட மாடல் அரசு சோழர்கள் புகழ்பாட என்ன செய்தது என்ற கேள்வியையும் அந்த கபடவேடதாரிகள் எழுப்புகின்றனர். பாவம் நாளிதழ் செய்திகளை நாள் தவறாது படித்திருந்தால் கூட போதுமே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு சோழர்கள் புகழ்பாட என்ன திட்டங்களை எல்லாம் அறிவித்துள்ளது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள முடியுமே. ஆயினும் பரவாயில்லை, தெரியாதவர்களுக்கும், தெரிந்தும் தெரியாதது போல உண்மையை மறைத்து தி.மு.க.வின் மீது வன்மத்தை வெளிப்படுத்துவோருக்கும் சோழர்களின் புகழ்பாட இந்த திராவிட மாடல் அரசு என்னவெல்லாம் அறிவித்துள்ளது என்பதை நினைவூட்டுவது நம் கடமை.

● **2023 - 2024 ம் ஆண்டிற்கான திராவிட மாடல் அரசின் நிதி நிலை அறிக்கையில், நீண்ட காலம் சோழர்களின் தலைநகராக இருந்த தஞ்சையில், சோழர்களின் புகழைப் பறைசாற்றும் வண்ணம் மாபெரும் அருங்காட்சியகம் அமைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.**

இதற்காக தஞ்சை பெரிய கோவில் அருகே நீலகிரி தெற்குத் தோட்டம் நகர்புல எண் 4 என்ற நிலப்பரப்பில் 6.39 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கீடு பெற்று, மாபெரும் அருங்காட்சியகம் அமைக்க கருத்துரு தயாரிக்க 29.02.2024 அன்று அரசாணை வெளியிடப் பட்டது. இந்த அருங்காட்சியகத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. அதுமட்டுமல்ல, இந்த அருங்காட்சியக வளாகத்திலேயே 5 அடி உயர பீடத்தில் ராஜராஜ சோழனுக்கு 35 அடி உயரத்தில் பிரமாண்ட சிலை அமைக்கவும் தமிழக அரசு பணிகளைத் தொடங்கியுள்ளது.

ஆனால், இந்த உண்மைகளை அறியாத கூட்டம் அல்லது உண்மைகளைத் தெரிந்தும் தி.மு.க. வின் சாதனைகளை மறைத்து பா.ஜ.க. விற்கு சாமரம் வீசத் துடிக்கும் கூட்டம் சோழர்களுக்கு தி.மு.க. என்ன செய்தது என்று வழக்கம் போல் அவதூறு பரப்பத் தொடங்கியுள்ளது.

● தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது தி.மு.க.

● சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது தி.மு.க,

● இருமொழிக் கொள்கையால் தமிழை இன்னும் காத்து நிற்பது தி.மு.க.

● தமிழிலும் வழிபாடு என்பதை உறுதி செய்தது தி.மு.க.

● வள்ளுவனுக்கு வானுயர சிலை எழுப்பியது தி.மு.க.


● கீழடியில் அருங்காட்சியகம் அமைத்துத் தந்தது தி.மு.க.

● இரும்பின் காலம் தமிழ்நாட்டில் இருந்துதான் தொடங்கியது என்ற வரலாற்று உண்மையை உரக்கச் சொன்னது தி.மு.க.

● நெல்லையில் பொருநை அருங்காட்சியகத்தை அமைத்திருப்பது தி.மு.க.

● மதுரையில் ஜல்லிக்கட்டு மைதானம் கட்டித் தந்தது தி.மு.க.

இப்படி தமிழுக்கும் தமிழர்களுக்கும் தி.மு.க.




அரசு தந்த திட்டங்களைப் போல் வேறு யார் திட்டங்களைத் தந்துள்ளனர்.

ஒடிசா தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் கருவூல அறையின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று தமிழர்கள் மீது திருட்டுப் பட்டம் சுமத்திய மோடி, தமிழ்நாட்டு மக்களையும் அதே போல் ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணி சோழர்களை கையில் எடுத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் மோடி,

**மோடிக்கு நாம் மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்வது ஒன்று மட்டும்தான். “மோடி அவர்களே இது தமிழ்நாடு. உங்கள் மோடி மஸ்தான் வேலைகள் இங்கு எடுபடாது” . முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஓரணியில் வெல்லும். அதை வரும் காலம் உங்களுக்கு உரக்கச் சொல்லும்.** ●

# அரசியலார்க்கு நீர் அறிவாலயம்!



தமிழ் பேசி, தமிழ் எழுதி,
தமிழுக்கு உழைத்து,
தமிழாய் வாழ்ந்தவரே,
நீர் இல்லாத நிலை
ஒன்றிய அரசால் தமிழுக்கு
நிதி இல்லை,
தமிழன் முன்னேற நிதி இல்லை,
தமிழகம் முன்னேற
திட்டங்கள் இல்லை;

தமிழனின் வியர்வை
GST பெயரால் இல்லாத மொழிக்கும்,
பொல்லாத
அரசியலுக்கும், சொல்லாமல்
செல்கிறது, தமிழகம்
நிதி இல்லாமல் தவிக்கிறது;
ஆனாலும் சாதித்தோம்

முன்னை பிறந்த அன்னைத் தமிழின்
செம்மை மகனே எம் தலைவா,
நம் தொன்மை பறைசாற்றி
செம்மொழி நிலையில் தமிழை வைத்தவரே;

தமிழ் மண் கீழடி சொல்லும்,
தமிழன் தொன்மை,
சிலர் மறுத்தாலும், மறைத்தாலும்,
வெல்லும் எங்கள்
வரலாற்று உண்மை;
உம் மொழிக் கொள்கை
மற்றவரும் ஏற்றதால்,
வாயடைத்து நிற்கின்றார்
உம்மை வசை பாடியவர்;

மாற்று மொழி திணித்து, தமிழை
தோற்றுபோகச் செய்கிறார்,
சிலர் அவரோடு கை கோர்த்து
மாநில உரிமை வீழ்த்துகிறார்;

தமிழனுக்கு உணர்வூட்டி
உரிமை காத்த உதய சூரியனே,
உம் சுயமரியாதை குரல் கேட்டு,
எழுந்தோம் நாங்கள்,
இதயமில்லாதவர்
உறங்கட்டும் இன்னும்

கவிஞர்களுக்கு நீர் தான் தலைப்பு,
தொண்டர்களுக்கு நீர் சரணாலயம்,
அரசியலார்க்கு நீர் அறிவாலயம்,
தமிழுக்கு நீர் நடைபயணம்,
உம் விடைப் பயணம்.

**எம். ஜாகீர் உசேன்**








சென்னையில், தேசிய பாதுகாப்புக் கழகம் தமிழ்நாடு பிரிவு சார்பில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு விருதுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை இயக்குனர் ஆனந்த், இணை இயக்குனர்கள் மற்றும் துணை இயக்குனர்கள் உடன் இருந்தனர்.

## கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில்

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் பயனாளிகளுக்கு உரிய ஆவணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஆக. 6 -

கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் அமைச்சர் மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கி சிறப்பித்தார்

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டுக்காக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய,

ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 6, வார்டு66ல் அமைந்துள்ள காமராஜர் மண்டபம் சமூகநலக்கூடத்தில் நேற்று (5.8.2025) செவ்வாய்கிழமை நடைபெற்றது.

இந்த “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இம்மு முகாமில் தீர்வு காணப் பட்ட பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்19 மனுக்கள் பெறப் பட்டு தீர்வு காணப்பட்ட19








மனுக்களுக்கும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 210 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்ட210 மனுக்களுக்கும்.. ஆதார் இணைய சேவைகள் மனு 36 பெறப் பட்டு தீர்வு காணப்பட்ட36 மனுக்களுக்கும்..

Planning approval கட்டட திட்ட அனுமதி மனு தொண்ணூத்தி எட்டு பெறப்பட்டு தீர்வு காணப்பட்ட அந்த 98க்கு மனுக்களுக்கும்..

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி 24 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப் பட்ட 24 மனுகளுக்கும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 11 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப் பட்ட 11 மனுக்களுக்கும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 25 பெறப்பட்டு தீர்வு காணப் பட்ட 25 மனுக்களுக்கும் ..

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 293 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்ட293 மனுக்களுக்கும்... தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தனி நபர் கடன் கேட்டு கோரிக்கை மனு2பெறப் பட்டு தீர்வு காணப்பட்ட இரண்டுக்கும் ..

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, தமிழ்நாடு மூலம் தொடங்கப்பட்ட “ பிற்படுத்தப்பட்டோர் உதவித்தொகை” திட்டம் மனு 2 பெறப்பட்டு தீர்வு காணப்பட்ட இரண்டுக்கும் என்ன பல்வேறு திட்டங்களில் பயன் பெற்ற ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார் .

இந்த சிறப்பு முகாமில் கிழக்கு பகுதி செயலாளர் ஐ.சி.எஃப். வ.முரளிதரன், மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் யோகபிரியா, மண்டல அலுவலர் சரவணன், செயற்பொறியாளர் சதீஷ் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.